## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 32/2016 | Date : 12.01.2023 | PW1 |
|---|---|---|
| Name: ராஜேஸ்வரி (எ) ராசாத்தி (எ) சித்தம்மாள் | W/o. **பழனிசாமி** | |
| Evidence Recorded Time: 03.15 P.M. to 03.35 P.M | | |

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

என் பெயர் ராஜேஸ்வரி (எ) ராசாத்தி (எ) சித்தம்மாள் என்றால் சரிதான். ஆதார் அட்டையில் ராஜேஸ்வரி என்று உள்ளது. பள்ளியில் படித்த சான்றிதழ்களிலும் ராஜேஸ்வரி என்று உள்ளது. நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த வருடம் படிப்பை முடித்தேன் என்றால் நினைவில்லை. பிறந்த தேதி தெரியுமா என்றால் 1966-ம் ஆண்டு, தேதி, மாதம் நினைவில்லை. திருமணம் தேதி தெரியுமா என்றால் 1984-ம் ஆண்டு, தேதி, மாதம் தெரியாது. இந்த வழக்கில் தடையுத்தரவு கோரி தாக்கல் செய்துளேன் என்றால் நினைவில்லை. அந்த மனுவில் எனக்கு எதிராக உத்தரவானது என்றால் அதுபற்றி தெரியாது. அந்த உத்தரவின் மீது மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பொங்கியண்ண கவுண்டர், செல்வம் எனது சகோதரர் ஆவார். அவர் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பழனிசாமி தாவா சொத்தில் தார்சு வீடும், கடைகளும் கடன் பெற்று கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அது என் அப்பா கட்டியது. என் அப்பா எந்த வருடம் கட்டினார் என்று தெரியாது. கட்டிய வீடு மற்றும் கடைகளுக்கு மின் இணைப்பு, சொத்து வரி ரசீது ஆகியவை பழனிசாமி பெயரில் உள்ளது என்றால் இல்லை, என் அப்பா பெயரில்தான் உள்ளது. அதேபோல வெங்கடாஜலம் தாவா சொத்தில் வில்லை வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை என் அப்பாதான் அந்த வில்லை வீட்டை கட்டினார். என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 31.12.2015-ல் இறந்தார். என் அம்மா 17.02.2021-ல் இறந்தார். தாவா சொத்தில் பொங்கியண்ணன், வெங்கடாஜலம், பழனிசாமி ஏற்படுத்திய கட்டுமானங்களுக்கு நான் எழுத்து பூர்வாக எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் விவசயாம் செய்து வருகிறார்களா என்றால் என் அப்பா இறந்த பிறகு செய்து வருகிறார்கள். என்ன விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் மாட்டு தீவனம் வளர்த்து வருகிறார்கள், விவசாயம் எதுவும் செய்யவில்லை. விவசாயம் செய்து வருகிறார்கள் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும், என் கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான், என் மகன், என் மருமகள் தனியாகவும், என் கணவர் தனியாகவும் சமைத்து சாப்பிட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் சேர்ந்து வசிக்கவில்லை என்பதால் என் மகன் ஜீவனாம்சம் கேட்டு

என் கணவர் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு உத்தரவு படி சொத்து எதுவும் நாங்கள் வாங்கவில்லை. என் மகன் கணவர் மீது வழக்கு போட்டு நான்கு ஏக்கர் நிலம் வாங்கிகொண்டார் என்றாலும் என் மகளுக்க ரூபாய் ஒரு லட்சம் கொடுத்துள்ளார் என்றாலும் சரிதான். 5–ம் பிரதிவாதி எங்களோடு சேர்ந்தவர் என்றாலும் அவருக்கு நாங்கள்தான் வக்கீல் வைத்து கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியெ‌ன ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.